Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

21.06.2020 ஞாயிற்றுக்கிழமை தொடர்புக்கு 076 584 2222

**புதினம்? தெரியுமோ**

தென்மராட்சியில் நடந்த கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில நடந்த விசயத்தை இந்தப் பத்திரியில பட்சி சொல்லியிருந் திச்சு தானே. அதின்ர தொடரா நடந்த சில விசயங்களையும் சொல்லத்தான் வேணும்.

பக்.2

# வாக்களிப்பு நேரம் இறுதி முடிவு 25!

கொழும்பு, ஜூன் 21

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பு நேரத்தை நீடிப்பதா அல்லது இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதியே இறுதி முடிவெடுக்கப்படும் என்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

பக்.2

## வல்வெட்டித்துறையில் திடீர் சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 21

வல்வெட்டித்துறை கெருடாவில், சீலாப்புலம் பகுதியில் இன்று அதிகாலை சுமார் 3 மணித்தியாலங்கள் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதலை முன்னெடுத்தனர். ஊரிக்காடு இராணுவ

பக்.2

## 5 மணிநேரம் ரிஷாத் சாட்சியம்

கொழும்பு, ஜூன் 21

2017ஆம் ஆண்டு கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் ஊடாக அரிசி இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்றும் சாட்சியம் வழங்கியுள்ளார். குற்றப்புல

பக்.2

## உ/த பரீட்சை எப்போது?

### ஆராய்வதற்கு குழு நியமிப்பு

கொழும்பு, ஜூன் 21

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான திகதி தொடர்பில் முன்வைக்கப்படும் யோசனைகளை பரிசீலிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளரும் ஏனைய மேலதிக செயலாளர்கள் மற்றும் சிலரும் உள்ளடங்குகின்

பக்.2

## கடலில் மூழ்கி நால்வர் பலி!

### ஒருவர் கவலைக்கிடம்

வத்தளை, ஜூன் 21

வத்தளை திக்கோவிட்ட பகுதியில் உள்ள கடலொன்றில் நீராடச் சென்ற நால்வர் உயிரிழந்தனர். அவர்களில் மூவர் பெண்கள். திக்கோவிட்ட மயானத்துக்கு முன்னாலுள்ள கடற்பகுதியில் நேற்று சனிக்கிழமை மாலை

பக்.2

## ஆபிரிக்காவில் இருந்து 289 பேர் நாடு திரும்பல்

கொழும்பு, ஜூன் 21

கொரோனாப் பெருந்தொற்றை அடுத்து பல நாடுகளிலும் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் ஆபிரிக்காவில் சிக்கியிருந்த 289 பேர்

பக்.2



## இந்து ஆலயம் மீது தாக்குதல்

மன்னார், ஜூன் 21

மன்னார் -யாழ் பிரதான வீதி, தள்ளாடி விமான ஓடுபாதை அருகில் காணப்பட்ட இந்துக்களின் சிறிய ஆலயம் ஒன்று, இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இனம் தெரியாத நபர்களால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த இந்துக் கடவுள்களின் புகைப்படங்கள் ஆலயத்தின் வாசல் பகுதியில் உடைத்து அழிக்கப்பட்டுள்ளன. சில படங்கள் அருகில் உள்ள பற்றை

பக்.2

## மேலும் 26 பேர் குணமடைந்தனர்

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் இன்றைய தினம் மேலும் 26 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்தனர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவர்களில், 8 பேர் அங்கொடை தொற்று நோய்

பக்.2

## இராட்சத சுறா அம்பாறையில்!

அம்பாறை, ஜூன் 21

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியநீலாவணை கடற்கரையில் கரைவலை மீன்பிடியில் 20 அடி நீளமான இராட்சத மீன் ஒன்று இன்று ஞாயிற்

பக்.2

## கிளிநொச்சியில் கத்தி குத்து!

கிளிநொச்சி, ஜூன் 21

கத்திக் குத்துக்கு இலக்கான குடும்பத்தலைவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பக்.2

## ஏழாலையில் 28 பேருக்கு இரண்டாவது பி.சி.ஆர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஏழாலை கிழக்கு அண்ணமார் கோயிலடிப் பகுதி ஏழாலை தெற்கு மயிலங்காடு மற்றும் மல்லாகம் ஆகிய இடங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் 14 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேருக்கான இரண்டாம் கட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளன. இணுவிலில் தங்கியிருந்த இந்தியப் புடைவை வியாபாரிக்கு கொரோனாத் தொற்று இருந்தமை அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவருடன் தொடர்பைப் பேணிய 14

பக்.2

## தேர்தல் தொடர்பான வர்த்தமானி நாளை

கொழும்பு, ஜூன் 21

சுகாதார வழிமுறைகளுடன் பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பான வழிமுறைகள் அடங்கிய வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது. குறித்த வர்த்தமானி நாளை திங்கட்கிழமை நள்ளிரவு வெளி

பக்.2



# வல்வெட்டித்துறையில்...

முகாம் படையினரும் வல்வெட்டித்துறை பொலிஸாரும் இணைந்து இந்தத் தேடுதலை முன்னெடுத்தனர். சுமார் 40 வீடுகள் இதன்போது சோதனையிடப்பட்டன. இதன்போது நீதிமன்றப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். வல்வெட்டித்துறை கொம்மாந்துறையில் கடந்த வாரம் கிணறு ஒன்றிலிருந்து 3 குண்டுகளும் ஒரு துப்பாக்கியும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# கடலில் மூழ்கி...

நீராடிக் கொண்டிருந்தபோதே அவர்கள் நால்வரும் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகின்றது. 16, 20, 30 வயதான பெண்கள் மூவரும் 13 வயதான சிறுவனுமே உயிரிழந்தனர். பெண்ணொருவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரும் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## 5 மணிநேரம்...

னாய்வுத் திணைக்களத்தில் நேற்றைய தினம் சுமார் 5 மணி நேரம் அவர் சாட்சியம் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வாக்களிப்பு....

கண்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேரம் இம்முறை ஒரு மணிநேரத்தால் நீடிக்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதன்படி காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை வாக்கெடுப்பு இடம்பெறலாம் எனத் தெரியவருகின்றது. வழமையாக காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை 9 மணி நேரமே வாக்களிப்புக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
எனினும், இம்முறை தனிநபர் இடைவெளி உட்பட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேர்தல் நடைபெறவுள்ளதாலேயே இந்த முடிவு எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் கேட்டபோது,
'5ஆம் திகதி வாக்களிப்பு முடிவடைந்ததும் 6ஆம் திகதி தான் வாக்கெண்ணும் பணி இடம்பெறும் என்ற முடிவை மாத்திரமே நாம் எடுத்துள்ளோம். எதிர்வரும் 25ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு கூடவுள்ளது. இதன்போதே வாக்களிப்பு நேரத்தை நீடிப்பது தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படும்.'- என்றார். (க-44)

# இந்து ஆலயம்...

காடுகளுக்குள் வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.
ஆலயத்தின் வெளிப்பகுதியில் காணப்பட்ட பிள்ளையார் சிலை குப்பைகள் மற்றும் மரத்துண்டுகளால் மூடப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆலயம் தொடர்ச்சியாக இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு, சேதப்படுத்தப்பட்டு வருகின்றது.
இந்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (க-56)

# ஆபிரிக்காவில்...

இன்று இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.
இவ்வாறு அழைத்துவரப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஆபிரிக்க நாடுகளான மடகஸ்கர், மொசாம்பிக், உகண்டா, கென்யா, ருவாண்டா மற்றும் தன்சானியாவில் ஹோட்டல் தொழிலில் ஈடுபடுபவர்கள் ஆவர். அனைவரும் மிக விரைவில் பி.சி.ஆர் சோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ம)

# உ/த பரீட்சை....

றனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துகள் மற்றும் யோசனைகளை அதிபர்களூடாக அமைச்சுக்கு வழங்குமாறு அனைத்து வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த கருத்துகள் மற்றும் யோசனைகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் இந்தமுறை உயர்தரப் பரீட்சையை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தினத்தில் நடத்துவதா, இல்லையா? என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். தற்போது கிடைக்கப்பெற்றுள்ள நிலைப்பாடுகளின் அடிப்படையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் பரீட்சையை நடத்த முடியும் என பல தரப்பினரும் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இந்தமுறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# மேலும் 26 பேர்...

வைத்தியசாலையில் இருந்தும், 3 பேர் வெலிகந்த ஆதார வைத்தியசாலையிலிருந்தும், 3 பேர் காத்தான்குடி வைத்தியசாலையிலிருந்தும், 5 பேர் ஹோமாஹம வைத்தியசாலையிலிருந்தும், 3 பேர் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையிலிருந்தும் 3 பேர் தெல்தெனிய வைத்தியசாலையிலிருந்தும் குணமடைந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. அதன்படி இலங்கையில் இதுவரை 1,498 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர். (ம)

# இராட்சத சுறா...

றுக்கிழமை அகப்பட்டது. அந்த மீன் கொடுப்புலி மடையன் சுறா என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த மீன் உணவுப் பாவனைக்கு பயன்படாது எனவும், இயற்கையாக நோய் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளது என்றும் மீனவர்கள் கூறுகின்றனர். (எ-ரி1)

# கிளிநொச்சியில்...

சம்பவம் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி கட்சன் வீதியிலுள்ள 5 வீட்டுத் திட்டப்பகுதியில் நேற்று இடம்பெற்றது. மாமன் மருமகனுக்கிடையிலான வாய்த்தர்க்கத்தின்போது மருமகன் மாமனாரை கத்தியால் குத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நடராசா மருதலிங்கம் என்பவரே காயமடைந்தார். கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (த-113)

# ஏழாலையில்...

குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் இரண்டாம்கட்ட பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. (ம)

# தேர்தல் ...

யிடப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். (க)

## புதினம் தெரியுமோ?

அந்தக் கூட்டம் முடிஞ்ச பிறகு பெண் வேட்பாளர் சசிகலா ரவிராஜின் பேஸ்புக்கில் வந்த பதிவு எண்டு , ஒரு பதிவு குறுக்க மறுக்க ஓடித்திரிஞ்சுது.
அதில முதல் நாள் கூட்டத்தில சின்ன லோயரின் சின்னத்தனத்தை கண்டிச்சதோட, அவர் சொல்லுற ஆள்( பெரிய அப்புக்காத்து) தமிழ்த் தேசியத்துக்கு விரோதமானவரெண்டும் , அவரோட சேர்ந்து தேர்தல் வேலைசெய்ய ஏலாதெண்டும் சொல்லுப்பட்டிருந்தது. இந்தப் பதிவு கூட்டமைப்பு ஆதரவாளர்களிடையே ஒரு பெரிய கொதிப்பை ஏற்படுத்தியது. இப்பிடி ஒரு பெண் வேட்பாளரை, அந்த 'ஒப்பினா பேசுற' வாய் அவனமானப்படுத்துவதா? இதெல்லாம் பெரிய அப்புக்காத்து இருக்கிற தைரியம் தான் எண்டு கருத்துகள் எழுத்தொடங்கின.
இந்தப்பதிவு எப்பிடியோ பெரிய அப்புக்காத்துவுக்கு தெரியவந்து, அவர் கட்சியோட குழம்பியிருக்கிறார். கட்சி சசிகலாவோட குழம்ப, உடனேயே அவரின் பேஸ்புக் கணக்கில் இந்த ஒரு பேஸ்புக் மட்டுமே எனது உத்தியோகபூர்வ பேஸ்புக் கணக்கு என்று ஒரு லெட்டர்ஹெட்டில் எழுதி, அதை போட்டோவ எடுத்துப் போட்டிருந்தா. அதுக்குப் பிறகுதான் கட்சி சமாதானம் ஆச்சுதாம்.
திரௌபதியை துரியோதன், துரியோதனன் அண்ட் பிறதர்ஸ் துகிலுரியேக்க , எல்லாரும் வேடிக்கை பார்த்தது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும், அதைமாதிரி ஒரு பொதுவெளியில் கூட்டமைப்பின் ஒரேயொரு பெண் வேட்பாளரை அதுவும் மாமனிதர் ஒருவரின் மனைவியை , கட்சியின் உறுப்பினரொருவர், தன்னுடைய எஜமானோடு அவர் இணைந்து செயற்பட மறுத்தார் என்ற காரணத்துக்காக அவமானப்படுத்துவைதை ஏனைய வேட்பாளர்கள் பார்த்துக் கொண்டு வாளாவிருந்து விட்டு,பின்னர் அதுதொடர்பில் வந்த பேஸ்புக் பதிவுக்காக அவருடன் குழம்புவதிலும் நியாயமில்லை.

# கோழி இறைச்சி விற்பனை மன்னாரில் முடக்கப்பட்டது

## கட்டுப்பாட்டு விலையை அதிகரிக்கக் கோரி போராட்டம்

மன்னார், ஜூன் 21
கோழி இறைச்சிக்கான அதிகூடிய கட்டுப்பாட்டு விற்பனை விலையை அதிகரிக்க கோரி, மன்னார் மாவட்ட கோழி விற்பனை உரிமையாளர்கள் இறைச்சி மற்றும் கோழி விற்பனையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.
தோலுடனான கோழி ஒரு கிலோ430 ரூபா, உரித்த கோழி 500 ரூபா என வர்த்தமானி அறிவித்தல் ஊடாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறித்த விலைக்கு விற்பனை செய்தால் அதிக அளவு நஷ்டத்துக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும். எனவே நிர்ணய விலையை அதிகரிக்க வேண்டும் என்று மன்னார் கோழி இறைச்சி விற்பனையாளர்கள் வியாபார நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.
கடந்த சில மாதங்களாக கோழிப் பண்ணை உரிமையாளர்கள் கோழிகளின் விற்பனை விலைகளை அதிகரித்துள்ளனர். கோழி விலை மற்றும் போக்குவரத்து செலவீனம், கோழித் தீவனம், உட்பட அனைத்தையும் உள்ளடக்கியே தற்காலிகமாக தாங்கள் விலைகளை அதிகரித்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.
மொத்த விற்பனையில் ஈடுபடும் பண்ணைகள் விலைகளைக் குறைத்தால் மாத்திரமே சில்லறை வியாபாரிகளாகிய நாங்கள் கோழியின் விலையைக் குறைத்து விற்பனைசெய்ய முடியும். இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து சிறிய அளவிலாவது இலாபம் அடையக் கூடிய விலையையாவது அரசு நிர்ணயிக்க வேண்டும் என கோழி விற்பனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அதேவேளை புதிய விலைக்கு விற்பனை செய்யாத வியாபாரிகளுக்கு எதிராக மன்னார் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவகின்றனர் என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (க-56)

# ஆதரவு என்றென்றும் தொடரும்!

## பிறந்த தின வாழ்த்தில் மஹிந்த உறுதி

*கொழும்பு, ஜூன் 21*

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எனது ஆதரவும், வழிகாட்டல்களும் தொடர்ந்து கிடைக்கும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



நேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவின் பிறந்த நாளாகும். அதை முன்னிட்டு தனது டுவீற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:

உங்கள் வாழ்க்கையின் இன்னொரு வருடத்தை நீங்கள் கொண்டாடும் இந்த தருணத்தில் இலங்கை தொடர்பாக எமக்குள்ள கூட்டு நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டுதல்களை நீங்கள் வழங்குவதற்கான ஞானம் வலிமை மற்றும் பொறுமை உங்களுக்கு கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்த பாதையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியிலும் எனது ஆதரவும் வழிகாட்டுதல்களும் கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை வழங்குகின்றேன்- என்றுள்ளது. (எ-ரி1)

# எவன்கார்ட் கப்பலில் மீள 23 இந்தியர்கள்!

*கொழும்பு, ஜூன் 21*

எவன்கார்ட் நிறுவனத்தின் கப்பல்களில் பணியாற்றுவதற்காக மீண்டும் இந்தியப் பிரஜைகள் இலங்கை வந்தடைந்துள்ளனர். எவன்கார்ட் நிறுவனத்தின் கப்பல்களில் இவர்கள் விரைவில் பணிகளைத் தொடங்குவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் அவர்கள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)

# மழைக்கு சாத்தியம்

*கொழும்பு, ஜூன் 21*

மேல், வடமேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். நாடு முழுவதும் குறிப்பாக மத்திய மலை நாட்டின் மேற்குச் சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோமீற்றர்வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. என்றுள்ளது.(எரி1)

# பெருமரம் வீழ்ந்து பேருந்துகள் சேதம்

*அக்கறைப்பற்று, ஜூன் 21*

அக்கரைப்பற்றில் வீசிய பலத்த காற்றால் பெருமரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் 3 அரச பேருந்துகள் சேதமடைந்துள்ளன. அக்கரைப்பற்று சாலையில் வீதியோரத்தில் இருந்த பெரும் மரமே சரிந்து வீழ்ந்துள்ளது.

சாலையின் பேருந்துகள் திருத்தும் கட்டடத்தின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த 3 பேருந்துகள் பலத்த சேதமடைந்தன. (எ-ரி1)

# 354 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

*கொழும்பு ஜூன் 21*

கொரோனா வைரஸ் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த 354 இலங்கையர்கள் இன்று காலை நாடு திரும்பியுள்ளனர்.

இந்தியாவின் மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களிலிருந்து 294 இலங்கையர்களும், பிரிட்டனிலிருந்து 60 இலங்கையர்களும் நாடு திரும்பியுள்ளனர் என்று கட்டுநாயக்க விமான நிலைய கடமை நேர அதிகாரி தெரிவித்துள்ளார். அவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (எ-ரி1)

### சனியன்று

# தொற்றாளர் எவருமில்லை

*கொழும்பு, ஜூன் 21*

நாட்டில் நேற்று சனிக்கிழமை எந்தவொரு கொரோனாத் தொற்றாளர்களும் இனங் காணப்படவில்லை என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை 3 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர், இதுவரை பதிவு செய்யப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 950 ஆகும். தற்போது நாடு முழுவதும் 11 மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்றுக்கான சிகிச்சை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த மருத்துவமனைகளில் 5 வெளிநாட்டவர்கள் உட்பட 467 இலங்கையர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இலங்கையில் 901 கடற்படையினரும், 691 வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர்களும் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தனர். கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சந்தேகத்தின் பேரில் மேலும் 39 நபர்கள் தற்போது மருத்துவமனைக் கண்காணிப்பில் உள்ளனர். (க)

# அச்சுறுத்தவேயில்லை கோத்தா அதட்டினார்!

## மஹிந்த ராஜபக்ஷ வக்காலத்து

*கொழும்பு, ஜூன் 21*

மத்திய வங்கியின் ஆளுநர், அதிகாரிகளை ஜனாதிபதி அச்சுறுத்தவில்லை, அதற்கான தேவையும் கிடையாது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி அதிகாரிகளை அண்மையில் சந்தித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாட்டின் பொருளாதார வீழ்ச்சி , கொவிட் 19 பின் இலங்கையின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந் தார். அப்போது அதிகாரிகளை அவர் கடிந்துகொண்டார். இது அரசியல் வட்டாரங்களில் விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சற்றுக் குரலை உயர்த்தி அரச அதிகாரிகளுடன் கதைக்கும் போது அரசாங்கம் அரச ஊழியர்களை அச்சுறுத்துவதாக குறிப்பிடுகிறார்கள். ஜனாதிபதி அமைச்சரவையின் பிரதானி என்ற பதவியில் இருந்துகொண்டு மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தற்போது வங்கி நிர்வாகம் முறையாகச் செயற்படுகிறது. அதன் பயனை மக்களே பெறுகிறார்கள். உள்ளகப் பிரச்சினையின் காரணமாக குடும்பம் மற்றும் அரசியல் கட்சி பிளவுபட்டால் பெரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி இன்று இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. இதற்கு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொறுப்பு கூறவேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரைக் கருத்துக்கள் மீண்டும் பொதுத்தேர்தலில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் நகைச்சுவையான பரப்புரைகளை முன்னெடுப்பது முக்கியமல்ல. மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டும். நாட்டுக்கும் , ஊருக்கும் சேவையாற்றுபவர்களை நாடாளுமன்றத்துக்கு இந்தமுறை தெரிவு செய்யுங்கள். அதிகார முரண்பாடுகளால் கடந்த அரசாங்கம் செயற்பட்ட விதத்தை மக்கள் நன்கு அறிவார்கள்-என்றார். (ப)

# மகன் தாக்கி தாய் சாவு

மகனின் தாக்குதலுக்கு இலக்கான தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மஹியங்கனை தமன பிரதேசத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் நடந்துள்ளது. சம்பவத்தில் 62 வயதான பெண் பொல்லால் தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் காயமடைந்த மற்றொருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க)

# ஒரு சில ஊடகங்கள் பக்கச்சார்பானவை

## கரு ஜயசூரிய விசனம்

கொழும்பு, ஜூன் 21

தேர்தல் வேளையில் ஊடகங்கள் மக்கள் பக்கம் நிற்பதுடன், எந்தவொரு அரசியல் பக்கச்சார்புமின்றி உண்மையை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கின்றன. ஆனால் சில ஊடக நிறுவனங்கள் பக்கச்சார்பாகவே செயற்படுகின்றன என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

தனது டுவிட்டர் பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தேர்தல் வேளையில் ஊடகங்கள் மக்கள் பக்கம் நிற்பதுடன், எந்தவொரு அரசியல் பக்கச்சார்புமின்றி உண்மையை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளன. எது எவ்வாறெனினும் சில ஊடகநிறுவனங்கள் பக்கச்சார்பாகவே செயற்படுகின்றன. அவை கொள்கை ரீதியில் அரசியல் கட்சிகளை மக்கள் அணுகுவதற்கு, உதவுவதற்குப் பதிலாக, சேறுபூசும் அரசியல் கலாசாரத்தையே காண்பிக்கின்றன - என்றுள்ளது. (ம)

# சட்டவிரோத மணல் அகழ்வால் அழிகின்றது பேராறு!

மன்னார், ஜூன் 21



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவு மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவு மற்றும் முள்ளியவளை பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பேராற்றுப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் அந்த ஆறு அழிவடையும் நிலையில் உள்ளது. அத்துடன் பெரும் மரங்களும் வேருடன் சாயும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

முத்துஐயன்கட்டு குளத்தின் கலிங்கிலிருந்து ஆரம்பித்து செல்லும் இந்தப் பேராறு பகுதியில் தொடர்ச்சியாக மணல் மாபியாக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இதனால் எதிர்காலத்தில் மக்கள் பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும். இவற்றைத் தடுக்கும் வகையில் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவு மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவு மற்றும் முள்ளியவளை பொலிஸ் பிரிவு பொலிஸார் கடும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் முத்தையன் கட்டுக்குளத்தினை நம்பி பேராற்றுப் பகுதியினை அண்டிவாழும் விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை அபிவிருத்திசெய்யும் நோக்கில் அரசு விவசாய உள்ளீடுகளை வழங்கி விவசாயச் செய்கையினை ஊக்கிவித்து வரும் வேளையில் சுமார் 15 கிலோமீற்றருக்கும் அதிக நீளம் கொண்ட பேராற்று பகுதியை அண்டிய பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையால் இயற்கை வளம் முற்றுமுழுதாக அழிவடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது - என்றனர். (ம-19)

# போர்க்காலம் போன்றே வடக்கில் சோதனைகள்

## சஜித் ஆதரவு அணி குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 21

போர்க்காலத்தைப் போன்று வடக்கில் இராணுவச் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற வேட்பாளர் எ.கமிலஸ் றொகான் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது

வடக்கு, கிழக்கில் கடந்த ஐந்து வருட காலத்தில் தமிழ் மக்கள் இராணுவ ஆக்கிரமிப்பு இல்லாமல் சுதந்திரமாக நடமாடக்கூடியதாக இருந்தது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்பாக அவ்வாறான நிலைமை காணப்படவில்லை. கோத்தாபாய ராஜபக்ச வெற்றி பெற்றதன் பின்னர் வடக்கு மாகாணத்தில் இராணுவச் சோதனை சாவடிகள் நிறுவப்பட்டு தமிழ் மக்கள் மீது போர்க்காலத்தைப் போன்று சோதனை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இது சிறுபான்மை மக்களுக்கு ஆபத்தானது என்பதுடன் நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

தமிழ் மக்கள் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் துறைகளில் சிரமங்களை எதிர்நோக்கும் போது அபிவிருத்தி என்பது காணப்படாது-என்றார். (ப)

# பொதுத்தேர்தலை மையப்படுத்தி மக்களுக்கு பொதிகள்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜூன் 21

இரவு நேரங்களில் பொதிகள் வழங்குபவர்கள் வெற்றி பெற்றால் வருங்காலத்தில் இந்தச் சமூகத்தைப் பணம் படைத்த முதலாளிகள் தங்களுடைய பணத்தால் ஆட்சி செய்யும் துர்ப்பாக்கியமான நிலைமையும் ஏற்படும் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்பொழுது தேர்தலை மையப்படுத்தி மட்டக்களப்பு. கல்குடாவில் எதிரணி அயலூர் வேட்பாளர்கள் இரவு நேரங்களில் பொதிகள் வழங்குபவர்களாகவும் சவூதியிலிருந்து வந்த பணத்தை பங்கிடுகின்றவர்களாகவும் உள்ளனர். அவர்கள் ஒருவேளை வெற்றிபெற்றால் வருங்காலத்தில் இந்தச் சமூகத்தைப் பணம் படைத்த முதலாளிகள் தங்களுடைய பணத்தால் ஆட்சி செய்யும் துர்ப்பாக்கியமான நிலைமையும் ஏற்படக்கூடும் என்றார். (ப)

# நிதி நிறுவன முறைகேடுகள் மக்கள் கருத்தறிய தீர்மானம்

கொழும்பு, ஜூன் 21

நிதி நிறுவனங்கள் மற்றும் லீசிங் நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு, பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறியவுள்ளது.

பொதுமக்களின் கருத்துகள் மற்றும் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன. இதைத்தவிர குழுவின் பிரதிநிதிகளை சந்திப்பதற்காக மேலதிகமாக 2 நாள்கள் வழங்கப்படவுள்ளன என்று ஜனாதிபதி செயலகத்தின் சட்டத்துறை ஆணையாளர் நாயகம், சட்டத்தணி ஹரிகுப்த ரோஹண தீர தெரிவித்துள்ளார்.

மக்கள் இது தொடர்பான யோசனைகள், கருத்துகள் மற்றும் முறைப்பாடுகளை இலங்கை மத்திய வங்கி, கொழும்பு - 1 எனும் முகவரிக்கும் அனுப்ப முடியும். கருத்துகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கான மின்னஞ்சல் முகவரியொன்றையும் தொலைபேசி இலக்கமொன்றையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மத்திய வங்கியில் நாளை நடைபெறவுள்ள தமது குழுக்கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள், சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு மூவரடங்கிய குழு அண்மையில் நியமிக்கப்பட்டது. மத்திய வங்கியில் பதிவுசெய்துள்ள நிதி நிறுவனங்களில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களின் போது சமூகத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகள் மற்றும் அவற்றை முகாமைத்துவம் செய்வது எவ்வாறு என்பது தொடர் பிலும் இந்த குழு ஆராய்ந்து பரிந்துரை செய்ய வுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை 14 நாள்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 97 பேர் குருதித்தானம்

யாழ்ப்பாணம், ஜூன் 21



கொக்குவில் இந்துக்கல்லூரியில் இன்று நடத்தப்பட்ட குருதித்தான நிகழ்வில், 97 பேர் குருதித்தானம் வழங்கினர். 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்தால் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு வார இறுதியிலும் குருதித்தான முகாம் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நாவற்குழி , கீரிமலை (கூவில்) ஆகிய இடங்களில் குருதித்தான முகாம் நடத்தப்பட்டன. ஒவ்வொரு இடங்களிலும் சுமார் 50க்கும் மேற்பட்டவர்கள் குருதிக்கொடையளித்தனர். (க-222)

# போதைப்பொருள் விற்பனை

## 3 பேர் பொலிஸ் பிடியில்

நீர்கொழும்பு, ஜூன் 21

நீர்கொழும்பு சிறையிலிருந்து வழி நடத்தப்பட்ட போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் இருந்து ஹெரோயின் மற்றும் கஞ்சா கடத்தல் வழிநடத்தப்படுகின்றது என்று கிடைத்த தகவலுக்கு அமைய மேல் மாகாண புலனாய்வு பிரிவினரால் நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சீதுவ, மீன்பிடித் துறைமுக வீதியில் வைத்து 100 கிராம் ஹெரோய்ன் மற்றும் 400 கிராம் கேரள கஞ்சா ஆகியவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் கட்டுநாயக்க விமானப் படை முகாமில் கடமையாற்றுபவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து போதைப்பொருள் கடத்தலை வழிநடத்தும் சிறைக் கைதி ஒருவரின் மனைவி மற்றும் சகோதரன் ஆகியோர் மினுவாங்கொடைப் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 1 கிலோ 450 கிராம் கேரள கஞ்சாவும் மற்றைய நபரிடமிருந்து 455 கிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-ரி1)

# உறவைத் தேடி ஓய்ந்த தாய்!



## போராட்டத்தின் போது மயக்கம்

முல்லைத்தீவு, ஜூன் 21

இறுதிப் போர்க் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தனது உறவுகளை மீட்டுத்தருமாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தாய் ஒருவர் நேற்று கதறி அழுதபடியே மயங்கி வீழ்ந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அதனால் பதற்றமடைந்தனர்.

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது தொடர் போராட்டத்தின் ஆயிரத்து 200ஆவது நாளான நேற்று கவனவீர்ப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர். தனது ஐந்து உறவுகளைத் தொலைத்த முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த தங்கவேல் சத்தியதேவி என்னும் தாயாரும் அதில் கலந்துகொண்டார். போராட்டத்தின் முடிவில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதை தாங்கிக் கொள்ள முடியாது அவர் கதறி அழுது மயக்கமடைந்தார்.

தங்கவேல் சத்தியதேவி கடந்த இறுப் போர்க் காலப்பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது ஐந்து உறவினர்களைத் தேடி வருகின்றார். மருமகன் சின்னத்தம்பி மகாலிங்கம், மகள் சிவாஜினி, பேரப்பிள்ளைகளான மகிழினி, தமிழ்ஒளி, எழிலினி ஆகியோரை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வட்டுவாகலில் வைத்து இராணுவத்திடம் கையளித்ததாகவும், அதன்பின்னர் அவர்களைக் காணவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.(ப-246)

# ஐஸ்கிறீம் விற்றவருக்கு தண்டம்

தென்மராட்சி, ஜூன் 21

உரிய மருத்துவச் சான்றிதழ் இன்றி ஐஸ்கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்டவருக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தால் 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் மருத்துவச் சான்றிதழைப் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கும் வரை ஐஸ்கிறீம் உற்பத்திக்கும் விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் மருத்துவச் சான்றிதழ் இன்றி நடமாடும் ஐஸ்கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்டவருக்கு எதிராக பருத்தித்துறை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்டால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றம் வியாபாரியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து அவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. உரிய சான்றிதழை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் வரை ஐஸ்கிறீம் உற்பத்திக்கும் விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டது. (ம-9)

# முகக் கவசம் அணிய சொன்னவருக்கு அடி!

## பொலிஸாரால் ஒருவர் கைது



கொழும்பு, ஜூன் 21

முகக் கவசம் அணியுமாறு கூறிய மருத்துவமனை ஊழியரைத் தாக்கியவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் நடந்துள்ளது. தாக்குதலுக்கு இலக்கானவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

பூஸா, பிடிவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முகக் கவசம் அணியாமல், காயமடைந்த நபரொருவரை கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அழைத்து வந்துள்ளார். அதன்போது, முகக் கவசம் அணியுமாறு வைத்தியசாலை ஊழியரொருவர் அந்த நபரை அறிவுறுத்தியிருந்த நிலையில், இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதையடுத்தே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# வெலிசறை முகாம் அடுத்த வாரம் செயற்படும்

கொழும்பு, ஜூன் 21

கொரோனாத் தொற்றுக்குள்ளான அதிகளவான கடற்படை உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்ட வெலிசறைக் கடற்படை முகாமின் செயற்பாடுகள் அடுத்த வாரம் முதல் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கவுள்ளன என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸிலிருந்து முழுமையாக விடுபட்டுள்ள வலயமாக வெலிசறைக் கடற்படை முகாம் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அதனுடைய செயற்பாடுகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கவுள்ளன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர், லெப்டினன்ட் கொமாண்டர் இசுர சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்த 901 கடற்படை உறுப்பினர்களில் இன்றுவரை 771 பேர் பூரண குணமடைந்துள்ளனர் என்றும், தொடர்ந்தும் 130 கடற்படையினர் சிகிச்சைபெறுகின்றனர் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ப)



# கோத்தாவிடம் ரூ.5 ஆயிரம் நேரில் கொடுத்த முதியவர்

கொழும்பு, ஜூன் 21

கொவிட் 19 நிதியத்துக்காக 5 ஆயிரம் ரூபாவை தபால் மூலம் அனுப்பியிருந்த முதியவருக்கு, ஜனாதிபதியைச் சந்திக்க வாய்ப்பளிக்கப்பட்டு அவர் தனது கையால் 5 ஆயிரம் ரூபாவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார்.

மெதிரிகிரியவைச் சேர்ந்த முன்னாள் கிராம சங்க உறுப்பினர் எஸ். பி. ஹேவாஹெட்ட (வயது - 86) அண்மையில் அலரிமாளிகைக்கு 5 ஆயிரம் ரூபா பணத்தாள் சகிதம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கைகளுக்குக் கிடைக்கும் வகையில் குறித்த பணமும் கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பணம், மகிந்த ராஜபக்சவின் ஏற்பாட்டில் முதியவரின் கைகளாலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஒரு மூத்த குடிமகனாகச் சமூகப் பொறுப்பை ஏற்று குறித்த பணத்தை அனுப்பி வைத்த ஹேவாஹெட்டவின் தாராள மனப்பான்மையைக் கௌரவிக்க வேண்டுமெனக் கருதிய பிரதமர், ஹேவாஹெட்டவின் கைகளாலேயே அதனை ஜனாதிபதியிடம் கையளிக்க ஏற்பாடு செய்யுமாறு பிரதமரின் செயலாளர் காமினி செனரத்துக்கு அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பிறந்த நாளான நேற்று மிரிசவெட்டிய புனித பூமியில் இடம் பெற்ற தானம் வழங்கும் நிகழ்வின் போது, பிரதமர் மகிஹிந்த ராஜபக்சவின் முன்னிலையில், ஹேவாஹெட்ட குறித்த நிதியை கொவிட்19 நிதியத்திற்காக ஜனாதிபதியிடம் கையளித்தார். (ப)

# பெரும்பான்மையைப் பெற ராஜபக்ஷவினர் பிரயத்தனம்

## முன்னாள் எம்.பி கருணாகரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 21

மொட்டுக் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தாலும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தாலும் இறுதியாக அவர்கள் சேரும் இடம் ராஜபக்ச குடும்பமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொருளாளருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடும் கோவிந்தன் கருணாகரம் தனது தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மொட்டுக் கட்சியில் வந்தாலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் வந்தாலும் அவர்கள் போய் சேருகின்ற இடம் ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சியில் இருக்கின்ற ஆட்சி அதிகாரத்திலாகும். தற்போதைய ஜனாதிபதியின் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு மிகவும் பிரயத்தனம் செய்கின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று இந்த நாட்டைக் கொடுங்கோல் ஆட்சிக்குள் கொண்டு செல்வதற்கு முனைகின்றனர். இதை நாங்கள் தடுக்க வேண்டும். நாங்கள் பேரம் பேசும் ஒரு சக்தியாக மாறினால் அவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கு எங்களுடன் பேரம் பேசலாம். மட்டக்களப்பில் நாங்கள் நான்கு உறுப்பினர்களை பெற்றுக்கொண்டோமானால் கிழக்கு மாகாணத்தில் ஆறு அல்லது அதற்கு மேலாக ஏழு ஆசனங்களைப் பெற்றால் வடக்கு கிழக்கிலே கிட்டத்தட்ட 20 ஆசனங்களை நாங்கள் பெறலாம். 20ஆசனங்களைப் பெற்றால் இந்த நாட்டில் பெரியதொரு சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கும். எதிர்காலத்தில் ஒன்றிணைந்து நாங்கள் செயற்பட வேண்டும் - என்றார். (ப-150)



# கோத்தாபயவுக்கு மஸ்தான் புகழாரம்

மன்னார், ஜூன் 21

கடந்த அரசாங்கம் இப்போது அதிகாரத்தில் இருந்திருந்தால் மக்களில் அதிகமானோர் கொரோனா வந்து இறந்திருப்பர் கோத்தாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் அவ்வாறான நிலைமையைத் தடுத்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுன கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து ஆளும் கட்சியாகவே செயற்பட்டது. எங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என தமிழ் மக்களின் பிரதான கட்சி ஒன்றின் தலைவர் தெரிவித்திருந்தார். ஆனாலும் அவர்கள் ஆளும் கட்சியில் இருந்தனர். அதன் மூலம் 'கம்பரலிய' போன்ற பல்வேறு திட்டங்களை மேற்கொண்டனர்.

தேர்தல் காலப்பகுதியில் தமிழ் கட்சிகள் பலர் கோத்தாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றால் வெள்ளைவான் வரும் எனப் பல பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டனர். ஆனாலும் இந்த 8 மாத காலப்பகுதியில் சிறப்பான ஒரு ஆட்சியை ஜனாதிபதி நடத்தியுள்ளார். இந்தத் தேர்தலில் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவுடன் ஆட்சி அமையும் சந்தர்ப்பம் உள்ளது.

கடந்த தேர்தலில் விட்ட தவறை மீண்டும் விடாமல் ஆளும் கட்சிக்கு ஆதரவளித்து எமது அபிவிருத்தி, உரிமை என அனைத்தையும் ஆளும் கட்சியில் இருந்தாலே பெற முடியும் - என்றார். (ப-56)

# மன்னாரில் ரெலோ மக்கள் சந்திப்பு

மன்னார், ஜூன் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ரெலோ நாடாளுமன்றத் தேர்தலுக்கான மக்கள் சந்திப்பு ஒன்றை நேற்று சனிக்கிழமை காலை மன்னாரில் ஏற்பாடு செய்திருந்தது. தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஏ.ரி.லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம், கட்சி யின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ப-56)

# முஸ்லிம்களின் காணிகள் பறிக்கப்பட்டால் போராட்டம்

## தமிழ் மக்களின் ஆதரவையும் கோருவோம் என எச்சரிக்கிறார் ஹரீஸ்

அம்பாறை, ஜூன் 21

பொத்துவில் முகுது மகா விகாரைப் பகுதியில், தொல்லியல் அளவீடு எனும் போர்வையில் முஸ்லிம் மக்களின் காணிகளை ஒரு தலைப்பட்சமாக கபளீகரம் செய்ய முற்பட்டால், பெரும் போராட்டம் வெடிக்கும். கிழக்கு முஸ்லிம்களை அணிதிரட்டி போராட்டத்தை முன்னெடுப்போம்.

இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுள்ள மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாருமான எச்.எம்.எச்.ஹரீஸ் எச்சரித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொத்துவில் முகுது மகா விகாரைப் பிரதேசத்தில் நில அளவைத் திணைக்களத் தொல்பொருள் அதிகாரிகள் காணி அளவீடுகள் செய்யும் விவகாரம் தற்போது பூதாகரமாக மாறியுள்ளது.

இந்த விவகாரத்தால் அங்கு பூர்வீகமாக வாழும் முஸ்லிம் மக்கள் பெரும் கொதிப்படைந்துள்ளனர். முஸ்லிம் மக்களின் குடியிருப்பு பிரதேசங்களைக் கபளீகரம் செய்வதற்கு இங்கு ஒரு தலைப்பட்சமான நோக்குடன் நில அளவை நடவடிக்கை முன்னெடுக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. மக்கள் கருத்தைக்கூடக் கேட்காமல் இந்த அடாவடி அரங்கேறுகின்றது. அங்குள்ள பௌத்த மதகுரு அரசை ஆட்டிப்படைக்கிறார். இந்த அநீதியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பொத்துவில் முஸ்லிம் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டமான இந்த விடயத்தில் முஸ்லிம் மக்கள் முக்கியமாக கிழக்கு முஸ்லிம்கள் அணிதிரள வேண்டும். எம்மக்களின் உரிமைக்காக உச்ச நீதிமன்றத்தின் படியேறவும் நான் தயாராகவுள்ளேன்.

முஸ்லிம் சமூகம் விழிப்புடன் இருக்க வேண்டும். பொத்துவில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த சவாலை முறியடிக்க வேண்டும். இந்தநிலைமை தொடர்ந்தால் முஸ்லிம்களை குறிப்பாக முதலில் கிழக்கு முஸ்லிம்களை அணிதிரட்டி இந்த அநீதிக்கு எதிராகப் போராடவும், தமிழ் மக்களின் ஆதரவைக் கோருவதற்கும் நாம் தயங்கப்போவதில்லை. என்றார். (ப-30)

# இராணுவச் சோதனைகள் மக்களுக்கு நன்மையாம்

வவுனியா, ஜூன் 21

கொரோனாவை காரணம் காட்டி வடக்கில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளால் மக்களுக்கு நன்மை என்று கூறியுள்ள சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பிரசாரத்துக்கு எதுவுமில்லாமையால் இராணுவம் தொடர்பாகப் பேசுகின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

போர் முடிந்த பின்னரும் வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல், கண்காணிப்புக்கள் இடம்பெறுகின்றன என்று ஐ.நா. விசேட அறிக்கையாளர் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். முல்லைத்தீவில் மாத்தளன், வலைஞர்மடம் போன்ற இடங்கள் இராணுவத்தால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன என்று அந்த இடங்களைச் சேர்ந்த மக்கள் அண்மையில் கவலை வெளியிட்டிருந்தனர். இவ்வாறனதொரு நிலையிலேயே உதயராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வன்னிப் பெருநிலப்பரப்பை பொறுத்தவரையில் தொடர்ந்தும் மாற்று இனத்தைச் சார்ந்தவர்கள் அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அரசாங்கம் சார்பில் ஒரு தமிழ் அமைச்சரை உருவாக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடாது தனித்து போட்டியிடுகின்றோம். தேர்தல் எனக்கு புதிதல்ல. கடந்த முறை போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் தோல்வியடைந்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட இன்று தேசியத்துடன் அபிவிருத்தி என்று கூறுகிறார்கள்.

இன்று உள்ள சோதனைச் சாவடிகள் கொரோனாவுக்காக உருவாக்கப்பட்டவை. இலங்கையின் பல பிரதேசங்களிலும் அது இருக்கிறது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரசாரத்துக்கு எதுவுமில்லாமையால் இராணுவக் கெடுபிடி என அதைக் கூறுகிறார்கள். அரசாங்கத்தைக் குறை சொல்வதே அவர்களது வழமை - என்றார் (ப-18)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 21.06.2020 இல் வெளியிடப்பெற்றது.